# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
***********

**முறையீட்டு மனு எண்.1377/2016**
**ஆணை நாள்: 02–08–2018**

**இம்முறைமன்ற நடுவம் முறையீடாக**
**பதிவு செய்தது.**

**எதிர்**

**செயல் அலுவலர்,**
**கிள்ளியூர் பேரூராட்சி,**
**கன்னியாகுமரி மாவட்டம்.**

**ஆணை.**

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் திரு.ஆர்.ஸ்ரீதரன், தனது 07.11.2015ம் நாளிட்ட முறையீட்டு மனுவில், மேற்படி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. ராஜரெத்தினம் என்பவர் 18–88–எண் கொண்ட வீட்டில் வசிப்பதாகவும், இவ்வீட்டிற்கு தனது அதிகாரத்தினை பயன்படுத்தி ரூ.366/– மட்டும் வரியாக செலுத்தி வருவதாகவும், இவரின் மகன் திரு.ஆர்.அஜின் என்பவர் பெயரில் 18–88/1 என்ற வீடு மேற்படி பேரூராட்சியில் உள்ளதாகவும், இந்த வீட்டிற்கு ரூ120/– மட்டுமே வரி செலுத்துவதாகவும் இந்த வீட்டிற்கான வரைபட அனுமதியும் பெறப்படவில்லை, எனவே மேற்படி முறைகேடுகளை விசாரித்து முறைகேடு செய்த தலைவர் மற்றும் முறைகேடுகளுக்கு துணை நின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி சமர்ப்பித்த மனுவின் மீது இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.150/2016/நாள் 16.09.2016ன்படி ஆணையிடப்பட்டு, மேற்படி ஆணையில் கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து பேரூராட்சிகளின் சட்ட விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தான அறிக்கையினை சமர்ப்பிக்கவும் ஆணையிடப்பட்டது.

இதன்னைத் தொடர்ந்து, கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்கண்ட ஆணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை தனது கடித ந.க.எண்.362/2015/ நாள்.07.12.2016ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கைக்கு

முறையீட்டு மனு எண் 1377/2016 என எண்ணிடப்பட்டு, மேற்படி அறிக்கையின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 362/2015 நாள்7.12.2015ல் கீழ்கண்டவாறான அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சியில் வார்டு எண். 8 ஆப்பிக்கோடு பகுதியில் 1998–99ம் ஆண்டின் சொத்து வரி பதிவேட்டின்படி சொத்து வரி சீராய்வின்போது திரு.வேதநாயகம், என்பவரின் பெயரில் கதவு எண்.18–87 ன்படி சொத்து வரி ரூ. 75/– நூலக வரி ரூ.7.40 ஆகமொத்தம் ரூ.82.40 ஆக இருந்து வந்துள்ளதாகவும், அப்போது செயல் அலுவலராக திருமதி கு.செல்லத்தங்கம், என்பவர் பணியில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.232/நாள். 29.10.1999ன்படி மேற்படி வீட்டிற்கு பழைய கதவு எண்.18–87 க்கு பதில் புதிய கதவு எண்.18–88 என வழங்கப்பட்டுள்ளதாகவும், சொத்து வரி சீராய்வின்போது மேற்படி வீட்டின் சொத்து வரி 25 சதவீதத்திற்கு ரூ.104/– என நிர்ணயம் செய்யப்படுவதற்கு பதிலாக பேரூராட்சி 2008–09ம் வருட சொத்து வரி பதிவேட்டின்படி கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டிருந்ததால் பரப்பளவு அடிப்படையில் சொத்து வரி ரூ.332/–, நூலக வரி ரூ.34/– ஆக மொத்தம் ரூ.366/– என நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும், அது சமயம் திருமதி, ந.உமா என்பவர் பணியில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி வீடு சுமார் 20 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்ததாகவும் மேற்படி வீடு, கட்டிட அனுமதி சம்பந்தமாக எந்த விவரமும் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்,

திரு.அஜின் என்பவரின் வீட்டிற்கு எவ்வித கட்டிட வரைபட அனுமதியும் பெறப்படவில்லை எனவும், ஆப்பிக்கோடு பகுதியில் வரி விதிப்பு எண்.5046, கதவு எண்.18–88/1 உடைய வீடு திரு.அஜின் என்ற பெயரில் 2014–15ம் ஆண்டு முதல் சொத்து வரி ரூ.110/– மற்றும் நூலக வரியாக ரூ 10/– ஆகமொத்தம் ரூ.120/– என அப்போதைய வரி வசூலர் திரு.த.லாசர் எனபவரால் முறைகேடாக 2014–15ம் ஆண்டு சேர்த்தல் பதிவேட்டில் திரு. அஜின் என்பவரின் பெயரில் இடம் பெறாத பட்சத்திலும், வரி நிர்ணயம் செய்யப்படாத பட்சத்திலும், கேட்புப் .பதிவேட்டில் குறிப்பிட்டு வசூல் செய்து வந்ததாக தெரிவித்துள்ளார். மேற்படி காலத்தில் திருமதி.ச.மாலதி என்பவர் செயல் அலுவலராக இருந்ததாகவும், மேற்படி தவறுக்கு மேற்படி செயல் அலுவலரும் வரி வசூலர் திரு.ம.லாசர் ஆகியோர் பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி சொத்து வரி சம்பந்தமாக 02.08.2016ம் நாளிட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி சொத்து வரி ரத்து செய்யப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து முன்னாள் தலைவர் திரு.வே.ராஜரத்தினம் என்பவருக்கு மேற்படி நிகழ்வு குறித்து கட்டிட வரைபட அனுமதி ஏதேனும் பெற்றிருந்தால் அதன் விவரம் 14.10.2015ல் பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கத் தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி நபர் எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை என கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. ஆர்.ஸ்ரீதரன், முன்னாள் துணைத் தலைவர், கிள்ளியூர் பேரூராட்சி தனது 09.03.2017ம் நாளிட்ட மனுவில் தமிழ்நாடு முறைமன்ற நடுவர் அவர்களின் ஆணை எண்.150/2016ஐ நடைமுறைப்படுத்த ஒரு மாத கால அவகாசம் அளித்தும் இது வரை அந்த ஆணையினை மதித்து நடவடிக்கை மேற்கொள்ளாத கிள்ளியூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.வே.ராஜரத்தினம், மீதும் அவருக்கு துணையாக இருந்த அரசு அலுவலர் மற்றும் ஊழியர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் பல காரணங்களை சொல்லி காலம் கடத்துவதாக தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையின்படி பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்தும், அவ்வாறான கட்டிடங்களுக்கு எந்த அடிப்படையில் வரி நிர்ணயம் செய்யப்பட்டது என்பது குறித்தான விரிவான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலவலருக்கு ஆணையிடப்பட்டது.

கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 362/2015/ நாள்.10.10.2017ன்படி தனது அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

கிள்ளியூர் பேரூராட்சி கடித ந.க.எண். 172/2016, நாள். 12.07.2016ன்படி திரு.ஆர்.அஜின், த/பெ திரு.வே..ராஜரெத்தினம் என்பவரின் கட்டிட எண்.18-88/1, வரி விதிப்பு எண். 5046 தொடர்பான கட்டிடத்திற்கு உரிய ஆவணங்களுடன் வரைபட அனுமதி பெற்றுக் கொள்ளவும், தவறும்பட்சத்தில் கிள்ளியூர் பேரூராட்சியிலிருந்து எந்த ஆவணங்களும் வழங்காமல் பெறப்பட்டுள்ள கட்டிட எண். 18-88/1 க்கான சொத்து வரி விதிப்பு ரத்து செய்யப்படும் என அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு வரைபட அனுமதி பெற உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்ய தெரிவித்திருந்தும் திரு.அஜின் என்பவர் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்யாததால் எந்த விதமான ஆவணங்களும் இல்லை எனக் கருதி 2014-15ம் வருடத்தில் கட்டிட எண்.18-88/1க்கு பெறப்பட்ட சொத்து வரி விதிப்பு செயல் அலுவலரின் அறிக்கை ந.க.எண். 362/2015, நாள்.03.02.2017ன்படி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிள்ளியூர் பேரூராட்சியிலிருந்து 18-88 எண் கொண்ட கட்டிடத்திற்கு சொத்து வரி பெற்றுக் கொண்டது தொடர்பாக உரிய வரைபட அனுமதி பெற்றுக் கொள்ள பேரூராட்சி கடித ந.க.எண்.362/2015 நாள். 07.12.2016ன்படி முன்னாள் பேரூராட்சித் தலைவர் திரு.வே.ராஜரெத்தினம் அவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து 09.12.2016 நாளிட்ட கடிதத்தின்படி கிள்ளியூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.வே.ராஜரத்தினம் அவர்களால் பதிலறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இதனடிப்படையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடித ந.க.எண்.6275/2014/ப.4/நாள். 06.01.2017ன்படி கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு மேற்கொண்டும், அலுவலக ஆவணங்களை ஆய்வு செய்தும் ந.க.எண். 362/2015/ நாள்.03.02.2017ன்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டு அதில் கட்டிட உரிமத்திற்கான இழப்பீடுத் தொகை ரூ 8,100/- ம் மேற்படி திரு.வே.ராஜரெத்தினம் என்பவரால் பேரூராட்சி செலுத்து சீட்டு எண்.327/2017-18 நாள்.29.06.2017ன்படி செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு.வே.ராஜரெத்தினம், என்பவரின் 18/88 எண் கொண்ட கட்டிடத்திற்கு சொத்து வரி மூலம் இழப்பிற்கான தொகை ரூ.2,836/- செலுத்து சீட்டு எண். 328/2017-18, நாள்.29.06.2017ன்படி பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டதாகவும், கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் திரு.வே.ராஜரெத்தினம் என்பவரின் 18-88 கதவு எண் கொண்ட கட்டிடத்திற்கு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டதை முறைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 23.10.2016 ம் நாளிட்ட அறிவிப்பாணையின் முறைமன்ற நடுவ ஆணை எண்.150/2016, ல் கிள்ளியூர் பேரூராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டும், கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். 362/2015/ நாள்.3.07.2016ல் தெரிவித்துள்ள விவரங்களின் அடிப்படையிலும், உரிய தல ஆய்வு மேற்கொண்டும், கிள்ளியூர் பேரூராட்சியின் அலுவலக ஆவணங்களை ஆய்வு செய்தும் ,

பேரூராட்சியில், பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆண்டு வாரியாக எத்தனை, அவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை, வசூலிக்கப்பட்ட கட்டிட உரிமத் தொகை மற்றும் அபராதத் தொகை, விதிக்கப்பட்ட வீட்டு வரி விதிப்புத் தொகை மற்றும் நாளது தேதி வரையிலான அபராதத் தொகை வசூலிக்கப்பட்ட விவரங்களுடனும், மேற்படி பேரூராட்சி முன்னாள் தலைவர் மற்றும் அவரது மகன் ஆகியோரது வீடுகளுக்கு விதிமுறைகளை மீறி வரி நிர்ணயம் செய்த பேரூராட்சி செயல் அலுவலர்களின் பெயர் விவரங்களுடன் அறிக்கை சமர்ப்பிக்க தெரிவித்து நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க.எண்.5266/2017/ப.4/நாள்.09.07.2018ன்படி தனது ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ எண். 1377/2016/நாள்.11.09.2017ன்படி நாகர்கோவில் மண்டலத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்களை கண்டறிந்து விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்த அறிவுரைகளின்படி, கிள்ளியூர் பேரூராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து ஆய்வுக்குழுவினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், அனுமதியற்ற கட்டிடங்கள் மொத்தம் 261 என கண்டறியப்பட்டதாகவும், மேற்படி அனுமதி பெறாத கட்டிடங்களுக்கு முறையாக கட்டிட அனுமதி பெற்றுக் கொள்ள பேரூராட்சி மூலம் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டு, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் கண்டறியப்பட்ட 261 கட்டிடங்களில், இதுவரை 32 கட்டிடங்களுக்கு முறையாக கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டு உரிமக் கட்டணமாக ரூ.2,21,041/–ம் காலிமனையிட வரி தொகையாக ரூ.1,91,005/–ம் நூலக வரியாக ரூ.20,493/–ம் மற்றும் கால தாமத கட்டணமாக ரூ.73,680/–ம் நாளது தேதி வரை வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 229 கட்டிடங்களுக்கும் முறைபடுத்த செயல் அலுவலரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இப்பொருள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:-

(i) இந்நேர்வில் கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திரு.வே.ராஜரெத்தினம் என்பவரின் வீட்டிற்கு கட்டிட வரைபட அனுமதி பெறாமல் வீட்டு வரி நிர்ணயம் செய்த அப்போதைய செயல் அலுவலர்கள் திருமதி .கு.செல்லத்தங்கம் (ஓய்வு,) திருமதி உமா, செயல் அலுவலர், மற்றும் முன்னாள் தலைவர் திரு.வே.ராஜரெத்தினம், அவர்களின் மகன் திரு.அஜின் என்பவரின் வீட்டிற்கு கட்டிட அனுமதி பெறாமலும், வீட்டு வரி விதிப்பு 2014–15ம் ஆண்டு பதிவேட்டில் மேற்படி நபரின் பெயர் இடம் பெறாத நிலையிலும் அவருக்கு வீட்டு வரி விதிப்பு செய்து வசூலித்து வந்த வரி வசூலர் திரு. ம.லாசர் மற்றும் இப்பணியினை மேற்பார்வையிடத் தவறிய பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ச.மாலதி ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

(ii) இம்முறைமன்ற ஆணைகளுக்குப் பின்னர், கிள்ளியூர் பேரூராட்சியில் விதிகளின் படி வரிவிதிக்கப்படாத கட்டிடங்களாக 261 கட்டிடங்கள் கண்டறியப்பட்டு அவைகளில் 32 கட்டிடங்களுக்கு உரிய விதிகளின்படி உரிமக் கட்டணம், காலிமனையிடவரி, நூலகவரி மற்றும்

காலதாமதக் கட்டணம் விதிக்கப்பட்டு ரூ.5,03,219/- வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 229 கட்டிடங்களில் மேற்படி வரியினங்கள் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கட்டிடங்கள் மீது உரிய விரைவு நடவடிக்கைகள் மேற்கொண்டு நிலுவையில் உள்ள வரியினங்களை வசூலிக்கவும் தக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்வதை கண்காணித்து உறுதி செய்யப்படவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

(iii) மேலும் முழுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு பேரூராட்சிக்கு ஏற்படுத்தப்பட்ட வரியின வருவாய் தொடர்பான விவர அறிக்கையினை இரண்டு மாதங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02ம் -நாள் **என்னால் கையொப்பமிடப்பட்டு** அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//ஆணையின்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர்,

பெறுநர்

1.திரு. [illegible]
முன்னாள் துணைத் தலைவர்,
கிள்ளியூர் பேரூராட்சி.

2.செயல் அலுவலர்,
கிள்ளியூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

4.மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இரு) நாகர்கோவில்.

5.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை -108.